**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.131/2019**

2025–ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15–ம் நாள் செவ்வாய்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 15.07.2025 | தகப்பனார் பெயர்: | தட்சிணாமூர்த்தி |
| பெயர்: | ராமநாதன் (DW-1 Chief.con ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | திருவெண்காடு | சமயம்: | |
| தொழில்: | கோயில் குருக்கள் | வயது : | 38/2025 |

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி : 15.07.2025</u>**

நான் இவ்வழக்கில் நான் 2–ம் பிரதிவாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபன பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபன பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபன பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 19.09.2018–ம் தேதியிட்ட தாவா சி அட்டவணை சொத்துடன் சேர்த்து எனக்கு எனது தகப்பனார் செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.2**

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாவை தள்ளுபடி செய்து தீர்ப்பாக வேண்டுகிறேன்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.